Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஸு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஸு ஆவணிமீ எஉ வெள்ளிக்கிழமை 23 August. 1963 [ ஙலை-உக

## விநாயகர் மகிமை

———0———

"வேழ முகத்து
விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்துவரும்"



இவ்வுலகமக்கள் இன்பத்தையே விரும்புவர். சிற்றறிவும் சிறுதொழிலும் மக்களிடம் அமைந்தன. முற்றறிவு முற்றுத்தொழில், பெருந்திறல், பேரருள் ஆதியன இறைவரிடம அமைந்துள்ளன. அதனால் தேவர், முனிவர் அசுரர், யக்கர், கருடர், காந்தருவர், கினன்ரர், கிம்புருடர் முதலிய பல கூட்டத்தவரும் கைலாசபதியான இறைவரையே போற்றுவர் அப் பரம்பொருள்தான் யாவரையும் பாதுகாக்க வல்லவர். அசுரர் வரம்வபற்றுத் தீமை செய்பவர்.

### தோற்றம்

முன்னொரு காலத்தில் கயாசுரன் என்பவன் தவத்தால் பலம் பெற்றுத் தேவாதியரை வருத்தினன். கைலைக்கிறைவரையே தேவாதியர் சரணடைந்தனர் சிவபிரானும் சத்தியும் யானை வடிவுடன் சேர்ந்த காலத்தில் பிரணவப் பொருளாகிய பெருந்தகை ஐங்கரக் கடவுள் தோன்றினர். பூதகணதிபராக விநாயகர் விளங்கினர் அவரையே கயமுகனை அழித்துத் தேவர்க்கருளும்படி சிவபிரான் அனுப்பினர்

விநாயகப் பெருமானும் பூதங்களும் மதங்கமாபுரம் புகுந்து யுத்தஞ் செய்தனர். கயமுகன் தவத்தால் ஓர்படையாலும் இறவா வரம் பெற்றவன். ஒரு தந்தத்தை முரித்து அதனல் குற்றி அவனை விநாயகப்பெருமான் அழித்தார். அவன் மூஷிகமாகி வரத் தமக்கு ஊர்தியாக்கினர்.

கயமுகனுக்குத் தேவாதியர் தோப்புக் கண்டமிட்டு வருவார்கள். அவனும் அப்படிச் செய்யாதவர்களை வருத்தினன். அவன் அழிந்தவுடன் அப் பணியை விநாயகப் பெருமான் சந்நிதியிற் செய்து வருவாராயினர். பின்பு கணேசர் காவேரியைக்கவிழ்த்தார். அகஸ்தியர் விநாயகராகிய பிராம்மணச் சிறுவரைக் குட்டச் சென்றர். நிஜ வடிவை ஐங்கரன் காட்டினர். அக் குட்டைத் தமது தலையில் அகஸ்தியர் குட்டிக் கொண்டார்.

ஐந்தாம் வேதஎழுத்தாளராதல்:-

வியாசபகவான் பாரதம் எழுத ஒரு புதிய எழுத்தாளரைத் தேடினர்; மூத்த பிள்ளை அகப்பட்டார், மேரு மலையில் விரைவாகப் பாரதம் எழுதப்பட்டது. எழுத்தாணி கொம்புதான்.

மாமனுக்கு அருளுதல்

விஷ்ணுவின் வஞ்சனைச் சாட்சி பாம்பான வடிவை கொடுத்தது. விநாயகரே அச் சாபத்தைத் தவிர்த்தருளினர்

ஔவையார் விநாயக வழிபாடு செய்பவர். ஒரு நாள் பூசை நடந்தது. சுந்தரமூர்த்தி நாயனரும், சேரமான் பெருமாணுயனரும் கைலை சென்றனர். பாட்டி அதனை புணர்ந்து பூசையை விரைவு செய்தார். கணேசப்பெருமானே சற்றுப் பொறுதியாகப் பூசி, நான் கயிலைக்கு உன்னைக் கொண்டுபோய் விடுவேன் என்றர். ஔவையார் இருபத்தோராயிரதது அறுநூறு சுவாசத்தை எழுற்று முப்பததொன்பதாச

(தொடர்ச்சி 4 பக்கம்)

பிரமஸ்ரீ.
வ மு இரத்தினேஸ்வரையர்

## நற் சிந்தனை

—:—

ஐந்து புலன்வென்ற
ஆன்ஞேர் திருவடிக்கீழ்
நைந்துருகி நின்று
நயப்பெறுவ தெக்காலம்

## கருணுகரப்பிள்ளையார் மகோற்சவம்

—:—

சரித்திரப் பிரசித்திவாய்ந்த உருப்பராய் கருணகரப்பிள்ளையார் கோயிலில் எதிர்வரும் ஞாயிறுக்கிழமை (25 8-63 கொடியேற்று விழா ஆரம்பமாகி செப்டம்பர் 2-ம் தேதி இரதோற்சவமும் 3-ம் தேதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

விழாக்காலங்களில் தினசரி வில்லுப்பாட்டுக்கதாப்பிரசங்கம் திருமுறைக் கச்சேரிகள் சங்கீத கதாப்பிரசங்கங்கள், கூட்டுப்பிரார்த்தனைகள் நடைபெறும,

இசைப்புலவர் சி. செல்லத்துரை, டக்டர் ஆர். சிவ அன்பு, ஆசிரியர் வீ.கே. ஆறுமுகம்போன்ற பல கலைஞர்கள் இசை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்கள்.

—

வ

எல்லா வுலகமு மானுய் நீயே ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே ஞானச் சுடர்விளக்காய் நின்ருய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே புகழ்ச் [illegible] யென்மேல
[illegible] வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே திருவையா ற[illegible]த
செம்[illegible]ற் சோதி

——

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அறபுதக் கோலநீடி யருமறைச்சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்ற.

## திருத்தொண்டத்தொகை தந்த சீர் நம்பியாரூரர்

இறைவனுடைய இன்னருளே யாவற்றிற்கும் காரணம் என்ற பேருண்மையுடன் தொடங்குகின்றது பெரிய புராணம். பெரிய புராண காப்பியத் தலைவனுக விளங்கும் நம்பியாரூரர் அந்தக் காப்பியத்தின் முதல் நூலாசிரியராகவும் விளங்குகிருர். இவ்வித தொடர்பை வேறு எந்தக் காப்பியங்களிலும் காண முடியாது. திருக்கைலாச மலையிலே இறைவனுக்குத் தொண்டு செய்தொழுகும் பெரும் பேறுடைய ஆலால சுந்தரரின் களங்கமற்ற சிந்தை பெண்கள்பால் சென்றது "வானவரீசரருள்" எனப் பெரியபுராணம் தெளிவாக எடுத்துக் கூறுகிறது அவ்வாறு இறைவன் அருள் புரிந்தமையால் இரு நன்மைகள் ஏற்பட்டன.

"மாதவம் செய்த தென்றிசை
வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத்
தொகைதர..."

என சேக்கிழார் அந்த இரண்டு நன்மைகளையும் எடுதது்க் காட்டுகிருர்.

திருமுனைப்பாடி நாட்டிலே "வாய்மை குன்ருத் திருமறையவர்கள் நீடும் திருநாவலூரிலே" திருவவதாரம் செய்த நாயனருக்கு "தம்பிரானருளினலே தவத்தினல் மிக்கார் போற்று நம்பியாரூரர் என்றே நாமமும் சாத்தி' என்று சேக்கிழார் இறைவன் அருளை நமக்கு நினை

ஸ்ரீ வ. குகசர்மா

ஆட்டுதல் படித்து மகிழ்தற்குரியது நம்பியாரூரர்க்கு விவாகப் பருவம் வந்ததும் தந்தையார் ஒழுங்கு செய்த திருமணத்தை நடைபெருமல் ஆவண ஓலை காட்டி வழக்கில் வெற்றி கொண்டார். அந்த வழக்கிலே இறைவனுடன் வலிய சொற்களைப் பேசியமையினலே வன்ருெண்டர் என்னும் நாமமும் பெற்றுர் இறைவனல் ஆட்கொள்ளப்பட்ட நம்பியாரூரர் இறைவனைத் துதித்துத் திருப்பதிகங்கள் பாடிப் பல திருப்பதிகள் தோறும் சென்று வணங்கினர்.

திருவாரூர் ஆலயத்தில் சென்று வணங்கும்போது பரவையார் என்னும் கன்னிப் பெண்ணைச் சந்திக்கிருர். கண்ட அளவிலே கருத்து அவள்பால் இழுபடுகின்றது. காட்சியளவில அவரைப் பலவாறு வியந்து நம்பியாரூரர் அவள்பால் மனம் செலவதற்கு ஒருகாரணத்தையும் கூறுகிருர்

"அற்புதமோ சிவனருளோ
அறியேனென் றதிசயித்தார்"

என்று கூறுகிருர்.

பரவையாரின் நிலையையும் இவ்வாறே சேக்கிழார் எடுத்துக் கூறுகிருர்.

"தண்டரள மணித்தோடும்
தகைத்தோடும் கடைபிறழும்
கெண்டை நெடுங் கண்வியப்பக்
கிளரொளிப்பூ ணுரவோனை
யண்டர் பிரானருளினல்
அயலறியா மனம் விரும்ப"

என்பது பெரிய புராணம். சிந்தையில் சிவனடியே தாங்கும செம்மையாளர் எது நடந்தாலும் சிவனருளே எனக் கொள்வர். அவ்வாருன உறுதியுடையோர்க்கு ஒருகாலும் துன்பமில்லை.

இறைவனுடைய அருளின்படி பரவையாரைத் திருமணம் செய்து "தன்னையாளுடையபிரான் சரணரவிந்த மலர் சென்னியிலுஞ் சிந்தையிலும் மலர்வித்து" திருப்பதிகம் பாடும் சுந்தரமூர்த்தி நாயனர் ஒருநாள் தேவாசிரிய மண்டபத்திலே சிவனடியார்கள் கூடியிருப்பதைக் கண்டு, இவ்வடியார்க்கு யாம் அடிமையாகும் நாளெந்நாளோ என்று மனதிலே நினைத்து இறைவனை வணங்கிய சமயத்திலே இறைவன் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" என்று அடியெடுத்துக் கொடுக்கத் திருக்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## உமக்கென்ன விதிவந்ததோ?

[ இரங்கற் புகழ்ச்சி ]

★

### "அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : மோகனம் :: தாளம் : ஆதி

பல்லவி

ஓடேந்திப் பிச்சைஏற்க ஒருகாலைத் தூக்கிநிற்க
உமக் கென்ன விதி வந்ததோ? – ஸ்வாமி.

அநுபல்லவி

மாடேந்திக் கைலாச மலைஏந்தி அடியார்கள்
மனமேந்தி மறைபேந்தி வைத்திருக்தும் செல்வமேநீ (ஓ)

சரணம்

குணமிகு மனைவியாள் கூடச் செலவுசெய்து
கொடிய பஞ்சம் வந்ததோ? — கானக்
குறத்தியைக் குஞ்சரியைக் குமரன் மணந்ததாலே
குலமதிப் பீனம் வந்ததோ? — மூத்த
கணபதி தொழிலின்றிக் கண்ட இடங்களேல்லாம்
கைநீட்டி உண்கிரு னென்றே? — மாயக்
கண்ணனெனும் மைத்துனன் களவாடி வெண்ணெயுண்டு
கட்டுண் டடியுண்டா னென்றே? — கையில (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மானுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சோபகிருது ஹூ ஆவணி மீ எ உ வெள்ளிக்கிழமை

## வரவு [illegible]ல்லை! விரய[illegible] அதிகம்

நிதி[illegible]ளயில்லாத நாட்டின் கதி[illegible] யாதாகும்? பொது ம[illegible]னின் வாழ்க்கைப [illegible]றப்பென்ன? இப்பொழுது பாராளுமன்ற மக்கள் சபையில் விவாதிக்கப்பெறும வாவு செலவுத் திட்டம் இக்கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிக்கின்றதென அங்கு நிகழ்த்தப்பெற்ற பல வேறு சொற்பொழிவு களிலிருந்தும் ஒருவாறு யூகிக்ககூடியதாயிருக்கின்றது. திட்டம இல்லாதகைத் திட்டம என்று பெயரிட்டு விட்டாற்போதுமா? இந்தப் பான்மையிலேதான் இப்பொழுது செயலாற்று நிதி அமைச்சர் வகுத்திருக்கும் யோசனைகளைப்பற்றி நாம் கூறவேண்டியதாயிருக்கிறது.

பொருளாதாரப் புலவர்களின் கருத்துரைகளுக்கமையாத திட்டம், பொது அறிவுக்குப் புலப்படாத திட்டம், இலங்காதிதினுவின் வரவு செலவு அமைப்பு ஆனல் ஏதோ இயற்றி விட்டோம என்று ஆளுங் கட்சியினர் இறுமாந்திருப்பதைப் பார்த்தால் நூறுக்கு ஒரு புள்ளிபெற்ற மாணுக்கன தான் வட்டம் பெறவில்லையே என்று களிப்பெய்தியவாறிருக்கின்றது சுதந்தரக்கட்சியின் துடிதுடிப்பு.

வரவுக்குரிய திட்டமான வழிவகையை வகுக்காத பொருளாதார அமைப்பு ஒரு அமைப்பா? வாழ்க்கைத் தரம் என்ன என்று சரிவரக் கூறமுடியாத ஆட்சியின் செம்மைதான் என்னேயோ!

செலவு குறைத்துச் சீர்திருக்கம் செய்வதில் இந்த ஆட்சிக்கு எந்தவிதமான சிந்தனையுமில்லை காங்கேயந்துறையில் 'சீமெந்து' உற்பத்திச் சாலையை விருத்தி செய்யப் பழைய துறைமுகமிருந்த அவ்விடத்திலே நல்ல முறையிற புது விதமான துறைமுகத்தை நிறுவவேண்டுமென்று முன் செய்த முடிவை அரசினர் மாற்றியிருப்பது விநோதமாயிருக்கின்றது. குறைந்த விரயத்திற் கூடுதலான வருவாயைப் பெறுவதற்குக் காங்கேயன்றுறை முகம் இயங்கவேண்டியது அவசியம. வெளிப்படையான உண்மையிது ஆனல் இலங்காதனவின் திட்டம இதற்கிடங்கொடுக்கவில்லையே.

## சித்தாந்த வகுப்பு

—0—

சைவபரிபாலன சபையாதாவில், சபை நாவலர் மண்டபத்தில் சரவணை சித்த ஆயுள்வேத வைத்தியரும், சித்தாந்த அறிஞருமாகிய திரு. வே. சோமசுந்தரம அவர்கள் தலைமையில் ஞாயிற்றுக்கிழமைதோறும் பி.ப. 3 மணிக்கும் 5 மணிக்குமிடையில் சிவஞானமாபாடிய வகுப்பு நடைபெறும். சுபதினமாகிய ஆவணி ௧௨உ (29-8-63) வியாழக்கிழமை பி. ப. 3 மணிக்கு வகுப்பு ஆரம்பிக்கப்படும். விரும்பியவர்கள் எவரும் சேர்ந்து படித்து, சைவ சித்தாந்த அறிவை வளாச்செய்தற்கு இது நல்ல தருணமாகும்.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 23-8-63.

## வேலணை திருஞானசம்பந்தர் மடாலயம்

ஸ்ரீமான் வி. கந்தப்பிள்ளை அவர்கள் சைவசமயம் தமிழ்மொழிக் கல்வி ஆகியவற்றின் அபிவிருத்தியின் பொருட்டு 1884-ம் ஆண்டு தமது சொந்தநிலத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையையும் ஒரு மடாலயத்தையும் தாபித்தார். குறித்த காபனங்கள் வேலணைத் தீவிலும் பிறஇடங்களிலும் உள்ள மாணவர்கள் வந்து தங்கி சைவசமய வொழுக்கத்துடன் கல்வி பயில பண்டைக் காலந்தொடக்கம உதவி வந்தன. அரசினர் மத்திய கல்லூரி அறிக்க வித்தியாசாலையில் ஆரம்பிக்கப்பட்ட பொழுது மடாலயம் கந்தோர் அறையாகவும் ஒரு மண்டபமாகவும் மாற்றி அமைக்கப்பட்டது. வித்தியாசாலை மனேஜர் நியமனத்தில் மாற்றம் ஏற்பட்டதன் பின்பு அரசாங்கப் வித்தியாசாலையை எடுத்ததன் விளைவாக மடாலயத்தைப் புறம்பாக நடத்தவேண்டுமெனக் கருதி மனேஜராகக் கடமையாற்றிய திரு. மு. மயில்வாகனம் அவர்கள் வித்தியாசாலை வளவில் 4 பரப்பு நிலத்தை மடாலயத்துக்கெனப் புறம்பாக்கி அந்நிலத்தில் ஒரு கொட்டகையை அமைத்து அதில் குருபூசைகள், புராணபடனம, தேவார வகுப்பு முதலிய சற்கருமங்களைப் புரிந்து வந்தனர். சைவசமய வளர்ச்சிக்கு இன்றியமையாததாகிய இம்மடாலயத்தைச் செவ்வனே எதிர்காலத்தில் நடத்துவது உத்தமம் எனக்கருதி 22-6-63-ல் வேலணை மடாலயத்தில் நடத்திய கூட்டத்தில் தனித்துத் தானே நடத்தி வந்த குறித்த மடாலயத்தை ஒரு தர்ம கர்த்தாச் சபையிடம் திரு மு மயில்வாகனம் அவர்கள் ஒப்படைத்தனர்

பெயர்:—வேலணை திருஞான சம்பந்தர் மடாலயம்.

நோக்கம்:—சைவசமயவிருத்திக்குரிய தொண்டுகள் புரிதலும், சமயகுரவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைகள், ஸ்ரீமானகந்தப்பிள்ளை நினைவுநாளகொண்டாடுதலும்.

2. தேவார வகுப்பு, புராண படனம், சமய தீட்சை, சித்தாந்த வகுப்புகள் நடத்தலும் திறமையுள்ள மாணவர்களுக்குப் பரிசில் வழங்கலும்.

3. அங்கத்துவம் சைவாசார சீலமுடையவராயுள்ள ஐவர் தர்மகர்த்தாச் சபையின் உறுப்பினராவர். அவர்களில்இருவர் ஸ்ரீமாந் கந்தப்பிள்ளை உபாத்தியாயரின் பரம்பரையிலிருந்தும் ஏனைய மூவரும் கந்தப்பிள்ளை உபாத்தியாயரின் மாணுக்க பரம்பரையிலுள்ளவராகவும் அமையவேண்டும. ஒரு இடம் காலியாக வந்தால் மற்றைய நால்வரும் மேலேகாட்டிய இலக்கணங்களுக்குப் பொருத்தமாக ஒருவரைத் தெரிவு செய்யலாம்

மடாலயத்துக்கு ஒரு நிரந்தரமான கட்டடத்தை அமைக்கும் வரையும் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையை நடத்துதற்கு விடப்பட்ட மடாலயத்தில் குருபூசை முதலிய சிவகைங்கரியங்களைக் காலந்தோறும் நடத்த இச்சபை தீர்மானஞ்செய்தது. இத்தருமத்தை நடத்தும் தர்மகர்த்தாச்சபையின் தலைவராக திரு மு மயில்வாகனம் அவர்களும,காரியதரிசியாக திரு. நா நடராசா அவர்களும், தனதிகாரியாகதிரு. சு. இரத்தினம அவர்களும் ஏனைய உறுப்பினராக திரு. ஐ சின்னத்துரை அவர்களும் திரு. பொ. சிவபாதசுந்தரம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

வருமான வரியில் ஒரு சிலருக்கு வசதி செய்து விட்டோம, மாவுக்கு விலை குறைத்துவிட்டோம்என்று செலவிவிட்டால் மக்கள் நிலைமை மாறிவிடுமா? நிதி அமைச்சர்களிலே யார் அதிக வல்லுநர் என்ற ஆராய்ச்சி செய்துவிட்டாற் போதுமா? ஒரு இலட்சணமுமில்லாத வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி விரித்துப்பேசுவதன் கருத்தென்ன? பொருளாதார நிலைமையை நன்குணாாது நல்ல வழியிலே நாடு சீர்பெறுவதற் குரிய திட்டத்தை இட்டுச் செயலாற்றுவதே அரசியற் பொறுப்புடையாரின கடமை. அவ்வாறு பணியாற்ற ஆதரவளியாதவர்கள் வழிவிலகி விடுதலன்றோ மனிதப் பண்பு? நூற்றைம்பதாறு உறுப்பினரில் எண்பதின்மரின் ஆதரவு போதுமா? அறுபத்துநான்கு அங்கத்தவர்களின் எதிர்ப்பிற்கு கருத்தில்லையா?

## நேரு அமைச்சில் நிரம்பிய நம்பிக்கை

பாரத பாராளுமன்ற மக்கள் சபையில் நேரு அமைச்சில் நம்பிக்கையில்லை என்ற திரு. ஆச்சாரிய கிருபளானி கொணர்ந்த கூற்றுக்கு 61 வாக்குகளே சாதகமாகக் கிடைத்தன. 346 அங்கத்தவர்கள் எதிர்த்து வாக்களித்தனர். 24 அங்கத்தவர்கள் வாக்கெடுப்பிற் பங்குபற்றவில்லை. சபையிலிருந்தவர்களில் நாலில ஒரு பங்கு அங்கத்தவர்களின் ஆதரவும் திரு. கிருபளானிக்குக் கிடைக்கவில்லை.

## ஈழத்தில் நடந்த வாக்கெடுப்பு

| | | | |
|---|---|---|---|
| வரவுசெலவுத்திட்டத்தை ஆகரித்து 80. | | எதிர்த்து | 64. |
| எதிர்க்கட்சியில் அங்கு சமுகமளியாதவர்கள் | | | 7. |
| இட்டப்படி நடப்பவர் | ,, | ,, | 1. |
| நியமன அங்கத்தவர் | ,, | ,, | 2, |
| எதிர்க்கட்சி யாவரும் வாக்களித்திருந்தால் | | | 71. |

மொத்தம்: 156. நியமன அங்கத்தவர்களை நீக்கினல் ஓரளவுக்குச் சரி அரைவாசி அங்கத்தவர்கள் எதிர்த்தனர் எனலாம். இவ்வரவு செலவுத் திட்டத்தை ஏற்கலாமா?

## அலங்கார உற்சவம்

ஸ்ரீ.கற்பகவிநாயகர் ஆலயம் (சாந்தையர் மடம்) வண்ணார் பண்ணை அலங்கார உற்சவம் ஆவணிமீ 8உ (24-8-63) சனிக்கிழமை முதல் 2-9-63) முடியவுள்ள காலங்களில் அலங்கார உற்சவம் நடைபெறும்.

## மட்டுநகரில் முத்தமிழ்விழா

மட்டக்களப்பு நகரமண்டபத்தில் இலங்கை தமிழஎழுத்தாளர் சங்க அனுசரணையுடன் கிழக்கு இலங்கை தமிழ் எழுத்தாளர்சங்கத்தின் ஆதரவில் முத்தமிழ்விழாவொன்று இன்று தொடக்கம் மூன்று நாட்களுக்கு நடைபெறும்.

23-8-63 வெள்ளிக்கிழமை மாலை $3\frac{1}{2}$ மணிக்கு மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை அவர்கள் மங்கலவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்கள்,

இயல் இசைநாடகம் ஆகியவற்றில் தேர்ந்த பெரியார்கள் யாழ்ப்பாணம், கொழும்பு, மலைநாடுஆகியஈழத்தின்பலபாகங்களிலிருந்து வந்து (இன்று முதல்) வெள்ளி,சனி ஞாயிறு ஆகிய மூன்று தினங்களுக்கு மட்டக்களப்பில்கூடும் தமிழ் விழாவில்பங்குபற்றுவார்கள்.

நாடக அரங்கு, இசை அரங்கு, பா அரங்கு, வாய்மொழி அரங்கு, கவி அரங்கு, இலக்கிய அரங்கு, உரை அரங்கு, நடன அரங்குஎன, பல்வேறு அரங்கங்களாக நடைபெறும்.

சேர். கந்தையா வைத்தியநாதன், வித்துவான் வேந்தனார், மகாகவி, நா.பார்த்தசாரதி, கலாநிதி ஆ. சதாசிவம், சைவப்புலவர், கா. அருணசல தேசிகமணி, கனக-செந்திநாதன், இரா சிவலிங்கம், செல்வி புஸ்பா செல்வநாயகம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, புலவர் கே. எஸ்: நடராசா, நீலவண்ணன், அண்ணல், இராஜபாரதி, ச. வே. பஞ்சாட்சரம், இ. முருகையன், வன்னியூர்க்கவிராயர். மு. சோமசுந்தரம்பிள்ளை, சி வி. வேலுப்பிள்ளை, எம். எம். சமீம். நாவேந்தன், யூ. எல். தாவூத், இரா அன்புமணி, சிற்பி ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

## அளவையூர் சஞ்சீவி திரு. விநாசித்தம்பி அவர்கள் கௌரவிக்கப்பட்டார்

—:0:—

நல்லூர் கந்த சுவாமி கோவில் உற்சவ தினங்களில் ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தலில் சங்கீத கதாப்பிரசங்கம் செய்து முருகனடியார்களுடைய பக்தியையும அறிவையும வளர்த்த "அளவையூர் சஞ்சீவி" திரு. சி விநாசித் தம்பியவர்கள் தேர்த்திரு விழாவன்றிரவு கௌரவிக்கப்பட்டனர்.

கூட்டத்திற்கு தலைமை வகித்த யாழ்ப்பாணம் முன்னாள் அரசாங்க அதிபர் திரு. ம ஸ்ரீகாந்தா அவர்கள் நல்லூரான் திருவருளின் பெருமையை வியந்து கூறி அடியார்களை கோவிலில் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தேர்த் திருப்பணிக்கு ஆர்வத்தோடு உதவி புரியும்வண்ணம் கேட்டுக்கொண்டனர்

தொடர்ந்து திரு. சி. உ சோமசேகரம் அவர்களும் சேர், கந்தையா வைத்தியநாதன் அவர்களும, திரு விநாசித்தம்பி அவர்களுடைய பக்தி, அறிவு, இசையாற்றல் சேவை முதலிய பண்புகளைப் பாராட்டிப் பேசினர்கள். நல்லூர் தேவஸ்தான அதிபர் ஸ்ரீ சண்முகதாஸ மாப்பாண முதலியாரவர்கள் பிரசாரகருக்கு வழங்கிய "அருட்கவி' என்னும் கௌரவப் பட்டம் வழங்கும் பாமாலை இசைப்புலவர் திரு. சி. செல்லத்துரை அவர்களால் நயமாகப் படிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமய பாடத் தேர்தல்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் ஆண்டு தோறும் நடத்தப்படும் சமயபாடப் பரீட்சை வருகிற மார்கழி (December) மாத நடுப்பகுதியில் நடத்தப்படும்.

தேவாரம், உபந்நியாசம, புராணபடனம் ஆகிய மூன்றும் தேர்தலுக்குரிய பாடங்களாகும். தேர்தல் மேற பிரிவு, மத்திய பிரிவு கீழ்ப்பிரிவு, ஆரம்பபிரிவு என்ற பாகுபாடுகளையுடையது. ஒவ்வொரு பிரிவுக்கும் மூன்று பரிசில்கள் ஷை சபையாதரவில் மார்கழி மாதத்தில் நடைபெறும் அகில இலங்கை சைவ மகாநாட்டில் சித்தி பெறும் பிள்ளைகளுக்கு வழங்கப்படும். பெண் பிள்ளைகளுக்கும், ஆண் பிள்ளைகளுக்கும் வெவ்வேறு பரீட்சைகள வைத்துப் பரிசில்கள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| **பிரவேசப்பணம்:—** | ஆரம்ப பிரிவு | — 50 |
| | கீழ்ப்பிரிவு | — 75 |
| | மத்திய பிரிவு | —1-00 |
| | மேற்பிரிவு | —1-25 |

தேர்தல்களிற் பங்குபற்ற விரும்பும் பிள்ளைகள் தங்கள் பெயரையும் வயதையும் குறித்துத் தலைமையாசிரியருடைய கைச்சாத்துடன் நுழைவுப்பத்திரங்களை 30-9-63-க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்புவார்களாக, பாட அட்டவணை அடுத்தவார இதழில் வெளியிடப்படும்.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 16-8-63.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்

மெய்யெழுத்துக்களில்லாத

## கட்டளைக் கலித்துறைகள்

[புலவர்மணி திரு. சி. சின்னையா அவர்களால் மெய்யெழுத்துக்கள் வராவண்ணம் எழுதப்பட்ட பாக்கள் இவை. கடந்த 4000 ஆண்டுக் காலத்துள் எவருமே இந்த அமைப்பில் எழுதியது கிடையாது எனத் தமிழ் அறிஞர்கள் கூறுகின்றனர்.]

விநாயகர் துதி

நாக மேனவரு வேழ முகாமறை நாதவோரு
காக வுருகோடு காவிரி நீரது காகுடிகை
யேக வருளிய சூரவி வேகவு னீரடிக
ளாக முளமுரை சேர வழிபடி ஞமருளே.

பிரபந்தம்

அடிதேடி மாய னயனோடி வானி லகலுமணி
முடிதேடி யேது மறியாத சோதி முதலையுடு
மடிமீதி லாவி யவிமா வுறுவை யிடுவனிதை
வடிவாக நாட லதுவார மாறு மதிமுகனே.

மறையோதி யீச னுரைதேறி வேறு மலிசுருதி
குறையாம லோதி மிகுசில மேவு குணமுடைய
ரறியாம வீடு தடுமாற வேட னறியுமதி
னிறைவாகு மாணை யெதுவோ கதிரை நிறையருளே.

வேறு சந்தம்

மாதவ மாகில மீதரி தாகிய வாறதனு
வீதியெ லாமழி வாகிய நிதிக ளேபெரிதா
யாதியி லானவெ லாமறை மாறிய ஆளுநநீ
தீதக லாறுமு காகதி ராபுரி சேரிறையே.

காணமு ளுகிய நாலையு மீறுப நாரியரே
மாணவ ரோகுரு மாரொடு தோழரை மானுவரே
ருணுடை யாதிய வேறய ளுடுள வேயுறுவா
ராணவ நீறிய வேலுடை யாயெமை யாளுதியே.

வேறு சந்தம்

உறவா யரனை புணரா ரிறையை யொருசிறிது
மறவா தவரை மதியா ரிறுதி வருமொருநா
ளுறுகா லனொடு கதையே தவறொ டுறுவதலா
லறிவோ ரறியு மிறைவா கதிரை யறுமுகனே.

ஒருநா ளெவரு மூடலே விடுவ துறுதியுல
கரசா ளவரு மூடனோ யகல வவுடதமே
புரிவா ரவரு மிறவா தறுகை புதினமிது
கருதா தவரி னறிவோ கதிரை கருநிறையே.

வேறு சந்தம்

விரைமயி லேவரு வாகன மாகிய வீரபிரா
னிருதிரு மேவிய பாதச ரோருக மேயெமது
கருமவி தீவினை போகரு ளீவன காணெவரு
மொருபொழு தேனும ருகதி ரேசனை யோருகவே.

## சைவாசிரியர் சங்கத்தின் அரிய தொண்டு

வித்தியாசாலைகளில் சமயக் கல்வி பயிற்றும ஆசிரியர்கள் சமய அறிவு நிரம்பியவர்களாக விருத்தல் அவசியம். யாழப்பாணம் சைவாசிரியர்சங்கம் இதனை உணர்ந்து ஆசிரியர்களுக்கு சமயஅறிவை வளர்க்கும நோக்கமாக சென்ற ஆகஸ்டு 20, 21, 22ம் நாட்களில் வடமாகாணத்தின் பலவிடங்களிலிருந்து அழைக்கப்பட்டஆசிரியர் களுக்கு வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையில் சமய பாட வகுப்பை நடத்தியது. பிரம்மஸ்ரீ சீதாராமசாஸ்திரி, வித்துவான் க. கி. நடராசன், பீ. ஓ. எல், வித்துவான் க. கார்த்திகேசு பி. ஏ. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு. மு. வைத்தியலிங்கம், சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் முதலியவர்கள் வேதம் ஆகமம், சைவத்திருமுறைகள், சைவசித்தாந்த சாத்திரங்கள் ஆகியவற்றின் பொழிப்பு உட்பொருள் முதலியவற்றை விளக்கி விரிவுரைகள் நிகழ்த்தினர்கள் இவ் விரிவுரைகளைக் கேட்டுப் பயனடைந்த ஆசிரியர்களுக்குவகுப்பிறபங்கு பற்றியதன் சான்றுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு விடுமுறைக் காலத்திலும் இத்தகைய வகுப்புகளை நடத்துதல் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரும் நன்மையைப் பயக்கும்.

### அங்கேதான் அவர்



பெரியவர்: யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்றத்து அங்கத்தவர் அரசாங்கத்துடன் சேர்ந்து வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் வாக்களித் தாராமே!

விகடன்: அப்படிச்செய்வதென்ற அரசாங்கத்துக்கு எப்பொழுதோ வாக்களித்திருக்கிறர் போலும் அங்கேதானே அவர்: ஏன் ஐயா சந்தேகம்!

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
கொய்யாத்தோட்டம்
யாழ்ப்பாணம்
1, சுவாப்பிள்ளை சவரிமுத்து
2, வ்றெட்றிக் வ்றன்சிஸ் அன்தோனிப்பிள்ளையும்
3, பெண் டேயிஸி புஸ்பம்
—வழக்காளிகள்.

இல. M,B. 4346.

எதிராக

கொக்குவில் மேற்கு
கொக்குவில்
1. செல்லப்பா ஆறுமுகமும்
2, பெண் அன்னலெஷ்மியும்
3, சோமசுந்தரம் குலவீரசிங்கமும்
4. பெண் பரமேஸ்வரியும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4346-ம் இலக்க வழகில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963ஸு புரட்டாதிமீ 14-ம்௳ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1585-ம். ரூபாய் 1000-த்துக்கு 23-10-61 தொடக்கம் 10-10-62 வரைக்கும் 15%வீத வட்டியும் அதன்மேல் முழுத் தீர்வைததொகைக்கும் இறுககும் வரை 5%வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 234-30-ம்.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக நல்லூர கோயிற்பற்று கொக்குவில், உத்தரவு பெற்ற உலாந்தா டி. சின்னத்துரை அவர்களால் 25-1-48 ம்௳ கணிககப்பட்ட 2353-ம் இலககப் பிளானில் மூன்றும் இலக்கத்தின் கீழ் பிரிவிடப்பட்ட துண்டு 'அல்லைகாடு' பர. நில இலா 33-9 5/8 குழியில் பர. நில இலா. 4-0 குழி இதடங்கலில் வடச்குப் பககமாக பிரிவிடப்பட்ட பர. நில இலா. 1 எல்லை கிழக்கு ரோட்டு. வடக்கு இரண்டாம் துண்டு. மேற்கு ருமு செல்லத்துரையினுதனம். தெற்கு எஞ்சிய காணி.

செ. விசாகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்.
133 பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
22-8-63.

M 118 23-8-63.

### திறப்புவிழா

உரும்பிராய் வடக்கு நவசக்தி சனசமூகநிலைய திறப்புவிழாவை 31-8-63 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வழக்கறிஞர் ஆ. சனபாலசிங்கம் (காரியதரிசி சைவபரிபாலனசபை) அவர்கள் தொடக்கி வைப்பார்கள பொதுக்கூட்டம் எம். சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில நடைபெறும் எஸ். இளங்கிரன், எஸ் செல்வத்துரை, பி. பி கணேசலிங்கம், எம. பாலசுந்தரம் எம் பி., கே. பி. முத்தையா, வி. பொன்னம்பலம், எம். கே. அந்தனிசில் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

### மஸ்கேலியா சரஸ்வதி மன்றம்

மஸ்கேலியாவில் கடந்த பல ஆண்டுகளாக திரு. [illegible] குமரகுருநாதனைச் செயலாளராகக்கொண்டு சமுகப்பணிகளும் சமயப்பணிகளும ஆற்றிவரும் சரஸ்வதி மன்றத்தினர் அண்மையில் மஸ்கேலியாவில் அப்பலம் ஒன்றில் அனுதையாக இறந்து கிடந்த ஓர் அம்மையாரின் பிணத்தை உரிய மரியாதையுடனும் தேவாரபாராயணத்துடன் எடுத்தச்சென்று தகனம் செய்தனர்,

அரசியல் அல்லலுற்றோருக்கு

## இசைவிழா ஒரேஒரு ஆறுதல்

தெல்லிப்பழை கலாரஞ்சின சபையின் இரண்டாம் இசைவிழா 19, 20, 21, 22-ம் திகதிகளில் இம்மாதம் முறையே வித்தியாதிபதி திரு. சு. [illegible] சோமசேகரம், வைத்தியகலாநிதி சு. சுப்பிரமணியம், வைத்தியகலாநிதி மு வேதாரணியம், இந்துசாதன ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையிலே மகாஜன அரங்கத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அரசியல் அல்லலில் அகப்பட்டிருக்கும் மக்களுக்கு இசை விழாக்களே ஒரு ஆறுதல். சங்கீதத்தின் இன்பம் ஒருங்குசேர்ந்து ஒற்றுமைப்பாட்டுடன் ஒருங்கமைந்து பலர் இயற்றுவதின் பயனுவது போலத் தேசசேவைக்கும் ஒருங்கு சேர்ந்து ஒரேயெண்ணமாய் அமைதல் வேண்டப்படும் என்று திரு. நம சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையுரையிலே குறிப்பிட்டார்.

தலைவர் பொன் முத்துககுமாரு, செயலாளர் திரு. மு. வர்ணகுலசிங்கம, திரு. உ. முத்துக்குட்டி, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை முதலியபலர்பங்குபற்றினர்.

இவ்வாரம் 25-8-63 — 31-8-63

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இந்த ஞாயிறு புதுக்கருமத்துக்குகந்ததாயிருக்கும். ஆனால் அடுத்த மூன்று நாட்களிலும் அவதானமாக நடந்துகொள்க ஏனைய நாட்கள மறுபடி புதுக்கருமத்துக்குகந்தவை. இருந்தும் மன அமைதி இருக்கமாட்டாது.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இவ்வாரத்தில் முதற்பகுதி புதுவேலைககுப் பொருத்தமானதாய் இருக்கும், கினதத உணவும் நிகழ்ச்சிகள் கைகூடும். ஆனால் உடல்நிலை அவ்வளவு திருப்தயாக இருக்காது, வியாழன் வெள்ளி சனி கவனமாக நடந்துகொள்க.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம், 3ம் பாதம்.

தேககசுகம் சீரடையும். புது அலுவல்கள் தடையுறும். ஆனாற் பின் சித்திதரும். சுற்றததவருடன் நெருககடி தோன்றக்கூடும். பணநிலை நியாயமாக நன்மையாயிருககும். சனிக்கிழமையன்று எச்சரிகையாயிருததல் வேணடும்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

எதிரிகளை இவ்வாரத்தில் மட்க்கலாம். புதுப் பணிகள் பயன் தரும். நிலபுலததால் இலாபம் எய்த இடமுண்டு. ஆனாற் குடும்பககோளாறுகள் காணப்பெறும்.

சிங்கராசி மகம், பூரம். உதத்ரம் 1-ம் பாதம்.

புது முயற்சிகளிலே அநுகூலத்தை எதிர்பார்ககலாம், இருந்தும் ஆரம்பத்திலே எதிர்ப்புத் தோன்றும். தேகநிலை அவ்வளவு பண்பாயிருக்காது. எதிரிகளுக்கு நட்டத்தை எதிர்பார்க்கலாம்.

கன்னிராசி உத்தரம் 2,3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உடல்நிலை தொடர்ந்து திருப்தியற்றதாயிருககும். தொழிலில் அநுகூலததை நம்பியிருககலாம். கீர்த்தியும் சமூக நயமும் காணப்படும். குடும்ப நிலைமை சீர்பெறும்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

நண்பர் சுற்றத்தார் இவர்களுடன் விபரீத விளக்கம்தோன்றும். சுதந்திர நடமாட்டத்துக்குத் தடையிருககும். வசையுரைப்போரைப்பற்றி அவதானமாக இருக்கவும்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இது ஒரு நல்ல வாரம், புது முயற்சிகளிலே அநுகூலம் உண்டு விவசாயவேலையில் இலாபம் கிட்டும், எதிரிகளுக்கு நட்டம் ஏற்பட இடமுண்டு நண்பர்கள் நல்ல உதவியாயிருப்பர்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்பத்தொல்லைகள் காணப்படும்; தேகநிலை மாற்றமும் சுற்றததவருடன் தவறுன விளக்கமும் தோன்ற இடமுண்டு நிலம் புலததால் இலாபத்தை எதிர்பார்ககலாம்.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

புரட்சிகரமான வாரம். மன அமைதியிருக்காது. புது முயற்சிகள் தடையுறும். உடல்நிலை யோசனைககுரியதாயிருக்கும் புது வேலைகளைச் சில காலத்துக்குத் தொடங்காதிருத்தல் நன்று.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

பணம் சம்பந்தமாக இது நல்ல வாரம். புது முயற்சிகள் தடையுற்றாலும் அநுகூலமா யிருக்கும் தேககசுகம் குழப்பமாயிருக்கும், அலுவலகத்திலே தொல்லை தோன்றுமலிருக்க முடியாது.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

நிலையற்ற வாரம். சச்சரவும் தொல்லையும் காணப்பெறும். பணமனவில் நல்ல வாரம். தாயாரின் தேகநிலை பாதிககப்படும். அந்நியரும் பழக்கமில்லாதவர்களும் உதவியாயிருப்பர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கந்தபுராணவுரை வெளியீட்டு நிதி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் வெளியிடப்படவிருக்கும் கந்தபுராண வுரை வெளியீட்டுக்கு நன்கொடையாகவும் சந்தாவாகவும் இதுவரை, பொருளுதவிய அன்பர்களின் பெயர்களை முன் வெளியிட்டுள்ளோம் உரை வெளியீட்டுக்கு 40000/- க்கு மேல வேண்டியிருப்பதால் தயவு செய்து அன்பர்கள் இந்தப்புணணிய தொண்டில் பங்குபற்றித் தங்களால ஆயன்ற பொருளுதவியைப் புரியுமாறு விநயத்துடன் வேண்டிககொள்ளுகின்றோம்.

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்,
1-1-63.

க. வேலுப்பிள்ளை,
தனாதிகாரி,
கந்தபுராண வுரைவெளியீட்டுக்குழு






## கோட்டு விற்பனவு விளம்பரம்

தெல்லிப்பழை மேற்கு
தம்பு கைம்பெண் சிவகாமிப் பிள்ளை. -வழக்காளி.
எதிராக
இல. M B. 3362

சுருகம்பானை
1. நரசிங்கம் சின்னத்தம்பு
2. நரசிங்கம் இராசையா
3. நரசிங்கம் நடராசா
4. நரசிங்கம் மகள் செல்லம்
5. நரசிங்கம்மகள் பரமேஸ்வரி
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 3362-ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும இரு துண்டுக்காணிகள் 1963 ம் ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி, மாதம் 2-ம் திகதி (2-9-63) சனிககிழமை முற்பகல் 10 மணி தொடககம அந்தக் காணிகளுககுள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபா 5380ம் இதில் ரூபா 4000க்கு 13-5-60 திகதி தொடககம் 13-9-60 திகதிவரைக்கும் 100க்கு 9 வீத வட்டியும் பின் திகதி தொடககம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 286-67 சதம். இதில் ரூபா 1100 -ம் மேலும் ரூபா 900 -ம் இறுபட்டது.

காணிகளின் விபரம்

3. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழைக கோவிற்பற்று தெல்லிப்பழை மேற்கிறை "உடத்தறை" நிலப்பரப்பு (11ம்) எலலை கிழகது விஞயர் பெண் வயிரவநாசசியின் ஆதனம். வடக்கு ஒழுங்கையும் மூத்ததம்பி சுப்பிரமணியத்தின் ஆதனமும், மேற்கு சினனததம்பி சிற்றம்பலத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு அப்பையன் பெண் கந்தியின் ஆதனம், இதில் சொரியலாய் ஏழில் ஆறு பங்கு (6/7)

4. மேற்படி தெல்லிப்பழை மேற்கிறை "வத்தானப்புலம்" நிலப்பரப்பு (8ர) குளி 8-ம் செய்பயிர் வான்பயிர்களும் கை ஒழுங்கையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு கை ஒழுங்கை. வடக்கு எதிராளிக்குரிய ஆதனம் மேற்கு ஒழுங்கை. தெற்கு மூத்ததம்பி இராசேந்திரத்தின் ஆதனம். இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer & Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 12-8-1963,
M. 111 23-8-63.

## திருத்தொண்டத்......
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொண்டத்தொகை பாடி முடித்தார்

இத் திருத்தொண்டத்தொகையே பெரிய புராணம் பாடுதற்கும் நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டத்திருவந்தாதி பாடுதற்கும் முதற்காரணமாயிற்று. இதனை தென்திசையில் தமிழும பக்தி நெறியும் வாழ உதவியது. இவற்றிற்குக் காரணமாய இறைவன் இன்னருளைத் துதித் இன்புறுவோம.

## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

உள்நாடு

| | |
|---|---|
| ஆங்கிலம் | 9-00 |
| தமிழ | 9-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 12-00 |

வெளிநாடு

| | |
|---|---|
| ஆங்கிலம் | 10-50 |
| தமிழ் | 10-50 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-50 |
| கல்வி நிலையங்களுக்கு | 4-50 |

## விநாயகர் மகிமை
(முதற்பக்கத் தொடர்ச்சி)

மாற்றிச் செய்த பெரும் யோகியாவார்.

யானையிற் சென்றோரும், குதிரையிற்சென்றோரும் கயிலையை நண்ண, கிழவியாகிய ஔவையாரும் விநாயகப் பெருமானுல் கயிலையைச் சேர்ந்தார், அந்நாள் முதல் "குதிரையுங்காதம கிழவியுங் காதம்" என்ற பழமொழி வழங்கலாயிற்று.

### பூசையின் பயன்

தேவர்கள விநாயகப் பெருமானுக்கு விசேஷ பூசை செய்தனர். விநாயகரும் அவர் வழிபாடு கொண்டு ஆநந்தக்கூத்தாடினர். அது ஆவணி மாசத்துப் பூர்வபக்கச் சதுர்த்தியாகும். சந்திரன் விநாயக வடிவை அவமதித்துச் சிரித்தான், அவனை அன்று பார்க்கக்கூடாது, நீசத்துவம் அடையச் சபித்தார் கணேசமூர்த்தி. தமமை நினைபோருக்கு விக்கினம வாராது காப்பார் நினையாதவருக்கு விக்கினம் வருவிப்பார். அதனுல், விக்கினேசுரர் என்பர்,

தந்தையாராகிய சிவபிரான் முப்புர தகனஞ் செய்யச் சென்ற தேரின் அச்சறுத்தார மூத்த பிள்ளையார் என்றுல் அப்பெருமான் மகிமையும, அருளும் அளவிட முடியாதன்றோ!

சைவப்பெருமக்கள் யாவரும் இயன்ற அளவு விநாயகரை வழிபட்டு வருவது நன்ருகும். மண்ணுல் புதிதாக விநாயக வுருவம் செய்து முறைப்படி ஆவாகித்துப் பலவித பணிகாரங்களோடு பூசிப்பது உத்தமமாகும். அத் தினம் 23-8-63 ஆகும்.

## ஏல விற்பனை
—0—

த இல. AS/3.

யாழ்ப்பாணம்கத்தர்மடம்பழம் ரோட் 36 – ம் இலகக வீட்டில் திருமதி. செல்லம்மா மகாலிங்கம் அவர்களிடம் 29-5-1957 முதல் 2-7-1962வரை அடைவு பிடித்து மீட்கப்படாத ரூபா. 20,000/- பெறுமதியுள்ள நகைகள் யாவையும் 1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் திகதி சனிககிழமை மாலை 3 மணி தொடக்கம் குறித்த கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

பொருட்களின் விபரங்கள் கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம்.

சி. செ முத்துக்குமாரு,
ஏலதாரர்.
ஏலதாரர் காரியாலயம்,
6, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.
M 116 23, 30-8-63

## தருமம் என்று ஒரு பொருள்

தருமத்தைப்பற்றி எவ்வளவு உரத்துக் கூறினுலும் ஒருவரும் அதைக் கவனிப்பதில்லை. அர்த்தம் காமம் (பொருள் இன்பம்) என்னும் இரு நிலைகளும் இயல்பாகவே ஒருவனுக்குக் கிடைக்கும்போது முதற்கண் உள்ளதாகிய தருமம் கவனியாமல் விடப்படுகிறது. தருமத்தைக் கடைப்பிடிப்பதனுல் மனிதன என்னும் தனமை அவனில் பிரகாசமடைகின்றது. கவலை, அச்சம், மகிழ்ச்சி முதலிய உணர்ச்சிகளால் தருமவழியினின்றும் விலகக் கூடாது. உணர்ச்சிகள் நிலையற்றவை. தருமம் நிலையானது.

—மகாபாரதம்.


யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std 14


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், நல்லூர்
சுப்பிரமணியம் நடராசா
—வழக்காளி.

இல. M. B. 4426
எதிராக
கோப்பாய், கோப்பாய் தெற்கு
1. சின்னத்தம்பி கந்தையா கைம்பெண் விசாலாட்சிப் பிள்ளை
2, சின்னத்தம்பி கந்தையா மகள் புவனேஸ்வரி
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 4426-ம இலக்க வழக்கில் எனக்குக்கிடைதத கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகள் 1963-ம் ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 21-ம் திகதி (21 – 9 – 63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 8690-ம். இதில் ரூபாய் 5500-க்கு 4-12-61திகதி தொடக்கம் 12-4-62 திகதி வரைககும் 100-க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுததொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 271-80 சதம், இதின் ரூபா 150 இறுபட்டது.

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று கோப்பாய் தெற்கிறை "வண்ணான் கடவை" நிலப்பரப்பு 4-ம் குளி 1½-ம், வீடும் பயிர்களும் வடமேற்கே சேனுதிராசா பெண் உமையவலலியின் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் தூர்வை நிலத்தில் பங்கும் 4 முழ அகலமுள்ள வழி வாய்க்கால் உரித்தும். எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு சேனுதிராசா பெண் உமையவல்லியின் ஆதனமும் சிதம்பரப்பிள்ளை பொன்னையின் ஆதனமும். மேற்கு ஆறுமுகம் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு கை ஒழுங்கை. இதடங்கலும் முற்பதிவு K 218/219,

2, மேற்படி கோப்பாய் தெற்கிறை "வண்ணான்கடவை" நிலப்பரப்பு (2-ம்) எல்லை கிழக்கு பொன்னையா இளையதம்பிக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம், வடக்கு சேனுதிராசா பெண் உமையவல்லிக்கும மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை. தெற்கு சிவக்கொழுந்து சிவஞானத்திற்கும் பெண் பொன்னுவுக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

3. மேற்படி கோப்பாய் தெற்கிறை "ஆட்டுப்படி" நிலப்பரப்பு 58-ம் குளி 9 14/32-ம். பயிர்களும், எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு வேதாரணியகுருக்கள் முத்துக்குமார சுவாமிக்குருக்களின் ஆதனம். மேற்கு ஆறுமுகம் கனகசபைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு ரோட்டும் கயிலாயபிள்ளை இராமலிங்கத்திற்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி (½) முற்பதிவு K 199/32,

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer,
& Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 1-7-1963.
M 115. 23-8-63.


## எஃப். ஜீவாஜி சகோதரர்கள்

மொத்த, சில்லறை வியாபாரிகள்

அச்சுக்கந்தோர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தேவையான காகிதம், அச்சடிக்கும் மைகள், பாடசாலை உபகரணங்கள், பாண்சாலைகளுக்கான 'கேக்' பெட்டிகள், கடுதாசிப்பைகள், வியாபாரிகளுக்கான என்வலப்புகள், நூல், மை, கொப்பி, பென்சில், பேனை, பலவித மட்டைகள், சோடனைக்கடுதாசிகள் என்பன எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எஃப். ஜீவாஜி சகோதரர்கள்,
ஜூபிலி பஜார், இலக்கம் 9, (ராணி சினிமாவுக்கருகில்)
மின்சார நிலைய விதி, யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்:
ஜீவாஜி சகோதரர்கள்,
50. புதிய சோனகதெரு கொழும்பு-12

கிளை:
இன்டிப்பெண்டன் ரேடிங்கொம்பனி,
51A, 1-ம் குறுக்குத்தெரு
கொழும்பு – 11

தொழிற்சாலை: 146, புதிய சோனகத்தெரு, கொழும்பு 12



யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 23-8-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org